பத்திரிக்கை செய்தி

வாரிசு சான்றிதழ் வழங்க ரூ.3,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய கிராம நிர்வாக அதிகாரி கைது

புகார்தாரர் திரு.காசி, போத்தபுரம் கிராமம், கிருஷ்ணகிரி தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தனது உடன் பிறந்த இறந்து போன அண்ணன் அவர்களின் மருமகள் மற்றும் குழந்தைகளுக்கு வாரிசு சான்றிதழ் கோரி இ-சேவை மூலமாக விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.ராமநாதன், கிராம நிர்வாக அதிகாரி, மிட்டள்ளி கிராமம், கிருஷ்ணகிரி தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.3,000/- லஞ்சமாக தர வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கிருஷ்ணகிரி பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 28.10.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.ராமநாதன், கிராம நிர்வாக அதிகாரி, மிட்டள்ளி கிராமம் அவர்கள் லஞ்ச பணம் ரூ.3,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.